ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

## ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை




### ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# உபதேசரத்தினமாலை

### ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி தனியன்

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா |
தஸ்ய தாஶரதே: பாதௌ ஶிரஸா தாரயாம்யஹம் ||

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஸாயநம:
ஸ்ரீ தாஸரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை

**வர்தமான ஸ்வாமி ஸ்ரீ உ.வே.கோ.க.வா.அ.**
**குமார ராமாநுஜாசார்யர்**



## வர்த்தமான ஸ்வாமி தனியன்

ஸ்ரீமத் வதூல குல வாரிதி பூர்ண சந்த்ரம்
வாதூல வேங்கட குரூத்தம புத்ர ரத்நம் |
ஸ்ரீசைல தேஸிக க்ருபாப்த ஸமஸ்த போதம்
ராமாநுஜார்ய குருவர்ய மஹம் ப்ரபத்யே ||

ஸ்ரீவேங்கடார்ய தநயம் தத்பாத கமலாஸ்ரயம் |
வாதூலாந்வய பூர்ணேந்தும் ராமாநுஜ குரும் பஜே ||

| | |
|---|---|
| **Swami Mudaliandan Thirumaligai**<br>4/345, Sannadhi Street,<br>**Singaperumal Koil**,<br>Chenglpet District,<br>Tamil Nadu, India. PIN 603 204 | **Swami Mudaliandan Thirumaligai**<br>73, East Chithra St,<br>**Srirangam**, Trichy,<br>Tamil Nadu, India. PIN 620 006 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>51, Sannadhi Street,<br>**Kancheepuram**,<br>Tamil Nadu, India. Pin 631 501 | **Swami Mudaliandan Thirumaligai**<br>**Thirunarayanapuram**,<br>Karnataka, India. PIN 571 431 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>Next to Theerthavaari Mandapam,<br>Vaazhai Kulam Street,<br>**Srivilliputhur**,<br>Tamil Nadu, India. PIN 626 125 | **Swami Mudaliandan Thirumaligai**<br>Sannadhi Street,<br>**Kooram**10 KM from Kancheepuram,<br>Tamil Nadu, India. PIN 631 558 |


**E Mail:** sridasarathy@gmail.com, acharya@mudaliandan.com
**Website:** www.mudaliandan.com
**Phone:** 91711 12050 , 96294 18994

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:      ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம:      ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம:      ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

# ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த
# உபதேசரத்தினமாலை

## தனியன்

கோயில் கந்தாடை அண்ணன் அருளிச் செய்தது
முன்னம் திருவாய்மொழிப் பிள்ளை தாம் உபதேசித்த * நேர்
தன்னின் படியைத் தணவாத சொல் மணவாள முனி *
தன் அன்புடன் செய் உபதேச ரத்தினமாலை தன்னை *
தன் நெஞ்சு தன்னில் தரிப்பவர் தாள்கள் சரண் நமக்கே

**ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

---

## ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# உபதேசரத்தினமாலை

‡ எந்தை திருவாய்மொழிப் பிள்ளை இன்னருளால் *
வந்த உபதேச மார்கத்தைச் சிந்தை செய்து **
பின்னவரும் கற்க * உபதேசமாய் பேசுகின்றேன் *
மன்னிய சீர் வெண்பாவில் வைத்து

கற்றோர்கள் தாம் உகப்பர் * கல்வி தன்னில் ஆசை உள்ளோர் *
பெற்றோம் என் உகந்து பின்பு கற்பர் ** மற்றோர்கள்
மாச்சரியத்தால் * இகழில் வந்ததென் நெஞ்சே! * இகழ்கை
ஆச்சரியமோ தானவர்க்கு

ஆழ்வார்கள் வாழி * அருளிச்செயல் வாழி *
தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி ** ஏழ் பாரும்
உய்ய * அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி *
செய்ய மறை தன்னுடனே சேர்ந்து

பொய்கையார் பூதத்தார் பேயார் * புகழ் மழிசை
அய்யன் * அருள்மாறன் சேரலர் கோன் ** துய்ய பட்ட
நாதன் அன்பர் தாள் தூளி * நற்பாணன் நற்கலியன் *
ஈதிவர் தோற்றத்து அடைவாம் இங்கு

அந் தமிழால் நற்கலைகள் * ஆய்ந்துரைத்த ஆழ்வார்கள் *
இந்த உலகில் இருள் நீங்க ** வந்துதித்த
மாதங்கள் நாள்கள் தம்மை * மண்ணுலகோர் தாம் அறிய *
ஈதென்று சொல்லுவோம் யாம்

‡ ஐப்பசியிலோணம்* அவிட்டம் சதயம் இவை *
ஒப்பிலவா நாள்கள் உலகத்தீர்! ** எப்புவியும்
பேசு புகழ் * பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார் *
தேசுடனே தோன்று சிறப்பால்

மற்றுள்ள ஆழ்வார்களுக்கு * முன்னே வந்துதித்து *
நற்றமிழால் நூல் செய்து நாட்டை உய்த்த ** பெற்றிமையோர்
என்று * முதல் ஆழ்வார்கள் என்னும் பெயரிவர்க்கு *
நின்ற துலகத்தே நிகழ்ந்து

பேதை நெஞ்சே! * இன்றைப் பெருமை அறிந்திலையோ *
ஏது பெருமை இன்றைக்கென்றென்னில் ** ஓதுகின்றேன்
வாய்த்த புகழ் மங்கையர் கோன் * மாநிலத்தில் வந்துதித்த *
கார்த்திகையில் கார்த்திகை நாள் காண்

‡ மாறன் பணித்த * தமிழ் மறைக்கு * மங்கையர் கோன்
ஆறங்கம் கூற அவதரித்த ** வீறுடைய
கார்த்திகையில் கார்த்திகை நாள் * இன்றென்று காதலிப்பார் *
வாய்த்த மலர்த்தாள்கள் நெஞ்சே! வாழ்த்து

கார்த்திகையில் உரோகிணிநாள் * காண்மினின்று காசினியீர்! *
வாய்த்த புகழ்ப் பாணர் வந்துதிப்பால் ** ஆத்தியர்கள்
அன்புடனே தான் * அமலனாதி பிரான் கற்றதற் பின் *
நன்குடனே கொண்டாடும் நாள்

மன்னிய சீர் மார்கழியில் * கேட்டை இன்று மாநிலத்தீர்! *
என்னிதனுக்கு ஏற்றமென்னில் உரைக்கேன் ** துன்னு புகழ்
மாமறையோன் * தொண்டரடிப்பொடி ஆழ்வார் பிறப்பால் *
நான்மறையோர் கொண்டாடும் நாள்

தையில் மகம் இன்று * தாரணியீர்! ஏற்றம் * இந்தத்
தையில் மகத்துக்குச் சாற்றுகின்றேன் ** துய்ய மதி
பெற்ற* மழிசைப் பிரான் பிறந்த நாள் என்று *
நற்றவர்கள் கொண்டாடும் நாள்

மாசிப் புணர்பூசம் * காண்மிணின்று மண்ணுலகீர்! *
தேசித் திவசத்துக்கேதன்னில் ** பேசுகின்றேன்
கொல்லி நகர்கோன் * குலசேகரன் பிறப்பால் *
நல்லவர்கள் கொண்டாடும் நாள்

‡ ஏரார் வைகாசி * விசாகத்தின் ஏற்றத்தைப் *
பாரோர் அறியப் பகர்கின்றேன் ** சீராரும்
வேதம் தமிழ் செய்த * மெய்யன் எழில் குருகை *
நாதன் அவதரித்த நாள்

‡ உண்டோ வைகாசி * விசாகத்துக்கு ஒப்பொரு நாள் *
உண்டோ சடகோபர்க்கு ஒப்பொருவர் ** உண்டோ
திருவாய்மொழிக்கு ஒப்பு * தென் குருகைக்குண்டோ *
ஒரு பார் தனில் ஒக்குமூர்

இன்றைப் பெருமை அறிந்திலையோ * ஏழை நெஞ்சே! *
இன்றைக்கென் ஏற்றமெனில் உரைக்கேன் ** நன்றி புனை
பல்லாண்டு பாடிய * நம் பட்டர் பிரான் வந்துதித்த *
நல்லானியில் சோதி நாள்

மாநிலத்தில் முன் நம் * பெரியாழ்வார் வந்துதித்த *
ஆனி தன்னில் சோதி என்றால் ஆதரிக்கும் ** ஞானியர்க்கு
ஒப்போரில்லை * இவ்வுலகுதனில் என்று நெஞ்சே! *
எப்போதும் சிந்தித்திரு

மங்களாசாசனத்தில் * மற்றுள்ள ஆழ்வார்கள் *
தங்கள் ஆர்வத்தளவு தான் அன்றி ** பொங்கும்
பரிவாலே * வில்லிபுத்தூர்ப் பட்டர் பிரான் பெற்றான் *
பெரியாழ்வார் என்னும் பெயர்

கோதிலவாம் ஆழ்வார்கள் * கூறு கலைக்கெல்லாம் *
ஆதி திருப்பல்லாண்டானதுவும் ** வேதத்துக்கு
ஓம் என்னுமது போல் * உள்ளத்துக்கெல்லாம் சுருக்காய் *
தான் மங்கலமாதலால்

‡ உண்டோ திருப்பல்லாண்டுக்கு * ஒப்பதோர் கலை தான் *
உண்டோ பெரியாழ்வார்க்கு ஒப்பொருவர் * தண் தமிழ் நூல்
செய்தருளும் ஆழ்வார்கள் தம்மில் * அவர் செய் கலையில் *
பைதல் நெஞ்சே! நீ உணர்ந்து பார்

ஆழ்வார் திருமகளார் ஆண்டாள்* மதுரகவி
ஆழ்வார் * எதிராசராம் இவர்கள் ** வாழ்வாக
வந்துதித்த மாதங்கள் நாள்கள் தம்மின் * வாசியையும் *
இந்த உலகோர்க்கு உரைப்போம் யாம்

‡ இன்றோ திருவாடிப்பூரம் * எமக்காக
வன்றோ * இங்காண்டாள் அவதரித்தாள் ** குன்றாத
வாழ்வான * வைகுந்த வான் போகம் தன்னை இகழ்ந்து *
ஆழ்வார் திருமகளாராய்

பெரியாழ்வார் பெண் பிள்ளையாய் * ஆண்டாள் பிறந்த *
திருவாடிப் பூரத்தின் சீர்மை * ஒரு நாளைக்கு
உண்டோ * மனமே! உணர்ந்து பார் * ஆண்டாளுக்கு
உண்டாகில் ஒப்பிதற்கும் உண்டு

அஞ்சுகுடிக்கொரு சந்ததியாய்* ஆழ்வார்கள்
தன் செயலை * விஞ்சி நிற்கும் தன்மையளாய்ப் ** பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் * பத்தியுடன் நாளும் *
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து

‡ ஏரார் மதுரகவி * இவ்வுலகில் வந்துதித்த *
சீராரும் சித்திரையில் சித்திரை நாள் ** பார் உலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள் * வந்துதித்த நாள்களிலும் *
உற்றதமக்கென்று நெஞ்சே ஓர்

‡ வாய்த்த திருமந்திரத்தின் * மத்திமமாம் பதம் போல் *
சீர்த்த மதுரகவி செய் கலையை ** ஆர்த்த புகழ்
ஆரியர்கள் தாங்கள் * அருளிச் செயல் நடுவே *
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து

‡ இன்றுலகீர்! சித்திரையில் * ஏய்ந்த திருவாதிரைநாள் *
என்றையினும் இன்றி தனுக்கேற்றமென் தான் ** என்றவர்க்குச்
சாற்றுகின்றேன் கேண்மின் * எதிராசர் தம் பிறப்பால் *
நாற்றிசையும் கொண்டாடும் நாள்

‡ ஆழ்வார்கள் தாங்கள் * அவதரித்த நாள்களிலும் *
வாழ்வான நாள் நமக்கு மண்ணுலகீர்! * ஏழ் பாரும்
உய்ய * எதிராசர் உதித்தருளும் * சித்திரையில்
செய்ய திருவாதிரை

‡ எந்தை எதிராசர் * இவ்வுலகில் எந்தமக்கா *
வந்துதித்த நாள் என்னும் வாசியினால் ** இந்தத்
திருவாதிரை தன்னின் * சீர்மை தனை நெஞ்சே! *
ஒருவாமல் எப்பொழுதும் ஓர்

எண்ணரும் சீர்ப் பொய்கை முன்னோர் * இவ்வுலகில் தோன்றிய
ஊர் *வண்மை மிகு கச்சி மல்லை மா மயிலை ** மண்ணியில் நீர்
தேங்கும் குறையலூர் * சீர்க் கலியன் தோன்றிய ஊர் *
ஓங்கும் உறையூர் பாணன் ஊர்

தொண்டரடிப்பொடியார் தோன்றிய ஊர் * தொல் புகழ் சேர்
மண்டங்குடி என்பர் மண்ணுலகில் ** எண்திசையும்
ஏத்தும் * குலசேகரன் ஊர் என உரைப்பர் *
வாய்த்த திருவஞ்சிக்களம்

மன்னு திருமழிசை * மாடத் திருக் குருகூர் *
மின்னு புகழ் வில்லிப்புத்தூர் மேதினியில் ** நன்னெறியோர்
ஏய்ந்த பத்திசாரர் * எழில் மாறன் பட்டர் பிரான் *
வாய்ந்துதித்த ஊர்கள் வகை

சீராரும் வில்லிபுத்தூர் * செல்வத் திருக்கோளூர் *
ஏரார் பெரும்பூதூர் என்னும் இவை ** பாரில்
மதியாரும் ஆண்டாள் * மதுரகவி ஆழ்வார் *
எதிராசர் தோன்றிய ஊர் இங்கு

ஆழ்வார்கள் ஏற்றம் * அருளிச்செயல் ஏற்றம் *
தாழ்வாதும் இன்றி அவை தான் வளர்த்தோர் ** ஏழ் பாரும்
உய்ய * அவர்கள் செய்த வியாக்கியைகள் உள்ளதெல்லாம் *
வையம் அறியப் பகர்வோம் வாய்ந்து

ஆழ்வார்களையும் * அருளிச் செயல்களையும் *
தாழ்வா நினைப்பவர்கள் தாம் ** நரகில் வீழ்வார்கள்
என்று நினைத்து நெஞ்சே! * எப்பொழுதும் நீ அவர் பால் *
சென்றணுகக் கூசித் திரி

தெருள் அற்ற ஆழ்வார்கள் * சீர்மை அறிவார் ஆர் *
அருளிச் செயலை அறிவார் ஆர் ** அருள் பெற்ற
நாதமுனி முதலான * நம் தேசிகரை அல்லால் *
பேதை மனமே! உண்டோ பேசு

ஓராண் வழியாய் * உபதேசித்தார் முன்னோர் *
ஏரார் எதிராசர் இன்னருளால் ** பார் உலகில்
ஆசை உடையோர்க்கெல்லாம் * ஆரியர்காள்! கூறும் என்று *
பேசி வரம்பறுத்தார் பின்

‡ எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு *
நம் பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார் ** அம் புவியோர்
இந்தத் தரிசனத்தை * எம்பெருமானார் வளர்த்த *
அந்தச் செயல் அறிக்கைக்கா

பிள்ளான் நஞ்சீயர் * பெரியவாச்சான் பிள்ளை *
தெள்ளார் வடக்குத் திருவீதிப் பிள்ளை **
மணவாள யோகி * திருவாய்மொழியைக் காத்த *
குணவாளர் என்று நெஞ்சே! கூறு

முந்துறவே பிள்ளான் * முதலானோர் செய்தருளும் *
அந்த வியாக்கியைகள் அன்றாகில் ** அந்தோ
திருவாய்மொழிப் பொருளை * தேர்ந்துரைக்க வல்ல
குருவார் * இக்காலம் நெஞ்சே! கூறு

தெள்ளாரும் ஞானத் * திருக்குருகைப் பிரான்
பிள்ளான் * எதிராசர் பேர் அருளால் ** உள்ளாரும்
அன்புடனே * மாறன் மறைப் பொருளை அன்றுரைத்தது *
இன்பமிகு ஆராயிரம்

தன் சீரை ஞானியர்கள் * தாம் புகழும் வேதாந்தி *
நஞ்சீயர் தாம் பட்டர் நல்லருளால் ** எஞ்சாத
ஆர்வமுடன் * மாறன் மறைப் பொருளை ஆய்ந்துரைத்தது *
எரொன் பதினாயிரம்

நம்பிள்ளை தம் உடைய * நல்லருளாலேவியிட*
பின் பெரியவாச்சான் பிள்ளை அதனால் ** இன்பா
வருபத்தி * மாறன் மறைப் பொருளைச் சொன்னது *
இருபத்து நாலாயிரம்

‡ தெள்ளியதா நம்பிள்ளை * செப்பு நெறி தன்னை *
வள்ளல் வடக்குத் திருவீதிப் பிள்ளை ** இந்த
நாடறிய * மாறன் மறைப் பொருளை நன்குரைத்தது *
ஈடு முப்பத்தாறாயிரம்

அன்போடு * அழகிய மணவாளச் சீயர் *
பின்போரும் கற்றறிந்து பேசுகைக்கா ** தம்பெரிய
போதமுடன் * மாறன் மறையின் பொருள் உரைத்தது *
ஏதமில் பன்னீராயிரம்

பெரியவாச்சான் பிள்ளை * பின்புள்ளவைக்கும்
தெரிய * வியாக்கியைகள் செய்வால் ** அரிய
அருளிச் செயல் பொருளை * ஆரியர்கட்கிப்போது *
அருளிச் செயலாய்த் தறிந்து

நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் * நால் இரண்டுக்கு *
எஞ்சாமை யாவைக்கும் இல்லையே ** தம் சீரால்
வைய குருவின் தம்பி * மன்னு மணவாள முனி *
செய்யும் அவை தாமும் சில

சீரார் வடக்குத் திருவீதிப் பிள்ளை * எழு
தேரார் தமிழ் வேதத்தீடு தனை ** தாரும் என
வாங்கி முன் நம்பிள்ளை * ஈயுண்ணீ மாதவர்க்குத்
தாம் கொடுத்தார் * பின் அதனைத் தான்

ஆங்கவர் பால் பெற்ற * சிறியாழ்வானப் பிள்ளை *
தாம் கொடுத்தார் தம் மகனார் தம் கையில் ** பாங்குடனே
நாலூர் பிள்ளைக்கவர் தாம் * நல்ல மகனார்க்கவர் தாம் *
மேலோர்க்கீந்தார் அவரே மிக்கு

‡ நம் பெருமாள் நம்மாழ்வார் * நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் * அவரவர் தம் ஏற்றத்தால் ** அன்புடையோர்
சாற்று திருநாமங்கள் * தான் என்று நன்னெஞ்சே! *
ஏத்ததனைச் சொல்லி நீ இன்று

துன்னு புகழ் கந்தாடைத் * தோழப்பர் தம் உகப்பால் *
என்ன உலகாரியனோ என்றுரைக்க ** பின்னை
உலகாரியனென்னும் பேர் * நம்பிள்ளைக்கோங்கி *
விலகாமல் நின்றதென்றும் மேல்

பின்னை வடக்குத் திருவீதிப் பிள்ளை * அன்பால்
அன்ன திருநாமத்தை ஆதரித்து * மன்னு புகழ்
மைந்தர்க்குச் சாற்றுகையால் * வந்து பரந்தது * எங்கும்
இந்தத் திருநாமம் இங்கு

‡ அன்ன புகழ் முடும்பை * அண்ணல் உலகாசிரியன் *
இன்னருளால் செய்த கலை யாவையிலும் * உன்னில்
திகழ் வசனபூடணத்தின் சீர்மை * ஒன்றுக்கில்லை *
புகழல்ல இவ்வார்த்தை மெய் இப்போது

முன்னம் குரவோர் * மொழிந்த வசனங்கள்
தன்னை * மிகக் கொண்டு கற்றோர் தம் உயிர்க்கு * மின்னணியாச்
சேரச் சமைத்தவரே * சீர் வசனபூடணம் என்னும்
பேர் * இக்கலைக்கிட்டார் பின்

ஆர் வசனபூடணத்தின் * ஆழ்பொருள் எல்லாம் அறிவார் *
ஆர் அது சொன்னேரில் அனுட்டிப்பார் ** ஓர் ஒருவர்
உண்டாகில் * அத்தனை காண் உள்ளமே * எல்லார்க்கும்
அண்டாததன்றோவது

உய்ய நினை உடையீர்! * உங்களுக்குச் சொல்லுகின்றேன் *
வையகுரு முன்னம் வாய்மொழிந்த ** செய்யகலை
யாம் * வசனபூடணத்தின் ஆழ் பொருளை * கற்றதனுக்
காம் நிலையில் நில்லும் அறிந்து

தேசிகர் பால் கேட்ட* செழும் பொருளைச் * சிந்தை தன்னில்
மாசறவே ஊன்ற மனனம் செய்து ** ஆசரிக்க
வல்லார்கள் தாம் * வசனபூடணத்தின் வான் பொருளை *
கல்லாதென்னோ கவர்ந்து

சச் சம்பிரதாயம் * தாம் உடையோர் கேட்டக்கால் *
மெச்சும் வியாக்கியைகள் உண்டாகில் ** நச்சி
அதிகரியும் நீர் * வசனபூடணத்துக்கற்ற
மதி உடையீர்! * மத்தியத்தராய்

சீர் வசனபூடணத்தின் * செம் பொருளை * சிந்தை தன்னால்
தேரிலுமாம் * வாய் கொண்டு செப்பிலுமாம் ** ஆரியர்காள்!
என்தனக்கு * நாளும் இனிதாக நின்றதையோ *
உந்தமெக்கெவ்வின்பம் உளதாம்

தம் குருவின் தாளிணைகள் தன்னில் * அன்பொன்றில்லாதார் *
அன்பு தன் பால் செய்தாலும் அம்புயை கோன் ** இன்ப மிகு
விண்ணாடு * தானளிக்க வேண்டியிரான் * ஆதலால்
நண்ணாரவர்கள் திருநாடு

‡ ஞானம் அனுட்டானம் இவை * நன்றாகவே உடையன்
ஆன * குருவை அடைந்தக்கால் * மாநிலத்தீர்!
தேனார் கமலத் * திரு மாமகள் கொழுநன் *
தானே வைகுந்தம் தரும்

உய்ய நினையுண்டாகில் * உன் குருக்கள் தம் பதத்தே
வையும் * அன்புதன்னை இந்த மாநிலத்தீர்! * மெய் உரைக்கேன்
பை அரவில் மாயன் * பரம பதம் உங்களுக்காம் *
கையிலங்கு நெல்லிக்கனி

ஆசாரியன் செய்த * உபகாரம் ஆனவது *
தூய்தாக நெஞ்சு தன்னில் தோன்றுமேல் * தேசாந்
தரத்தில் இருக்க * மனம் தான் பொருந்தமாட்டாது *
இருத்தல் இனி ஏதறியோம் யாம்

தன் ஆசாரியனுக்குத் * தான் அடிமை செய்வது * அவன்
இந்நாடு தன்னில் இருக்கும் நாள் ** அந்நேர்
அறிந்தும் அதில் ஆசை இன்றி * ஆசாரியனைப்
பிரிந்திருப்பார் ஆர் * மனமே! பேசு

ஆசாரியன் * சிச்சன் ஆருயிரைப் பேணும் அவன் *
தேசாரும் சிச்சன் அவன் சீர் வடிவை * ஆசையுடன்
நோக்கும் அவன் என்னும் * நுண்ணறிவைக் கேட்டு வை`த்தும் *
ஆர்க்கும் அந்நேர் நிற்கை அரிதாம்

பின்பழகராம் * பெருமாள் சீயர் * பெருந்திவத்தில்
அன்பதுவும் அற்று மிக்க வாசையினால் * நம்பிள்ளைக்
கான அடிமைகள் செய் * அந்நிலையை நல் நெஞ்சே*
ஊனமற எப்பொழுதும் ஓர்

ஆசாரியர்கள் * அனைவரும் முன் ஆசரித்த *
ஆசாரந் தன்னை அறியாதார் ** பேசுகின்ற
வார்த்தைகளைக் கேட்டு * மருளாதே * பூருவர்கள்
சீர்த்தநிலை தன்னை நெஞ்சே! சேர்

நாத்திகரும் நல் கலையின் * நன் நெறிசேர் ஆத்திகரும் *
ஆத்திக நாத்திகருமாம் இவரை * ஓர்த்து நெஞ்சே!
முன்னவரும் பின்னவரும் * மூர்க்கர் என் விட்டு * நடுச்
சொன்னவரை நாளும் தொடர்

நல்ல மணம் உள்ளதொன்றை * நண்ணி இருப்பதற்கு *
நல்ல மணம் உண்டாம் நயமது போல் ** நல்ல
குணம் உடையோர் தங்கள் உடன் * கூடி இருப்பார்க்கு *
குணம் அதுவே யாம் சேர்த்தி கொண்டு

தீய கந்தம் உள்ளதொன்றைச் * சேர்ந்திருப்பதொன்றுக்கு *
தீய கந்தம் ஏறும் திறமது போல் ** தீய
குணம் உடையோர் தங்கள் உடன் * கூடி இருப்பார்க்கு *
குணம் அதுவே யாம் செறிவு கொண்டு

முன்னோர் மொழிந்த * முறை தப்பாமல் கேட்டு *
பின்னோர்ந்து தாம் அதனைப் பேசாதே ** தம் நெஞ்சில்
தோற்றினதே சொல்லி * இதுசுத்த உபதேசவர
வாற்றதென்பர் * மூர்க்கர் ஆவார்

ψ‡ பூருவாசாரியர்கள் * போதம் அனுட்டானங்கள் *
கூறுவார் வார்த்தைகளைக் கொண்டு நீர் தேறி **
இருள் தருமா ஞாலத்தே * இன்பம் உற்று வாழும் *
தெருள் தருமா தேசிகனைச் சேர்ந்து

ψ‡ இந்த உபதேச ரத்தினமாலை தன்னைச் *
சிந்தை தன்னில் நாளும் சிந்திப்பார் ** எந்தை
எதிராசர் * இன் அருளுக்கென்றும் இலக்காகி *
சதிராக வாழ்ந்திடுவார் தாம்

**எறும்பியப்பா அருளிச்செய்தது**

ψ மன்னுயிர்காள் இங்கே மணவாள மாமுனிவன் *
பொன்னடியாம் செங் கமலப் போதுகளை உன்னிச் *
சிரத்தாலே தீண்டில் அமான் அவனும் நம்மை *
கரத்தாலே தீண்டல் கடன்

**வேங்கடகுரவே நம:**
**அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்**
**ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**